**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 139/2024 |
| Prosecution Witness | : | **அ.சா.**3 |
| Name | : | **சாந்தி** |
| Father's / Husband Name | : | **பிரபாகரன்** |
| Address | : | **செட்டிக்குளம்** |
| Age | : | 30/2025 |

**தேதி : 03.02.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ தெரியும். தனியார் நிதி நிறுவனத்தில் லோன் வாங்கி கொடுப்பது சம்மந்தமாக எதிரியை எனக்கு தெரியும். எதிரி எனக்கு லோன் வாங்கி கொடுத்துள்ளார். தவணை தொகையை எதிரியிடம் கொடுப்பேன், அவர் வங்கியில் கட்டிவிடுவார். எதிரி ஸ்டுடியோ வைத்திருந்தார். அந்த பொருட்கள் ரிப்பேர் ஆகிவிட்டது என்றும், அதற்கு பணம்தேவைப்படுகிறது என்றும், வீட்டு வேலை செய்வதற்காக பணம் தேவைப்படுகிறது என்றும், தனக்கு உடம்பு சரியில்லை என்பதற்காகவும் என்னிடம் பணம் கேட்டார். என் பெயரில் லோன் வாங்கி அவரே கட்டிவிடுவதாக சொன்னார். துறையூரில் உள்ள முத்துட் நிதி நிறுவனத்தில் ரூ.30,000/- வாங்கி எதிரியிடம் ரூ.18,500/- எதிரியின் Gpay நம்பருக்கு அனுப்பிவைத்தேன். 26.02.2024ம் தேதி அன்று மணச்சநல்லூரில் உள்ள

Equitos நிதி நிறுவனத்திலிருந்து ரூ.35,000/-பெற்று ரூ.29,000/-த்தை எதிரியின் நம்பருக்கு Gpay மூலம் அனுப்பிவைத்தேன்.

பெரம்பலூரில் உள்ள பேட் என்ற நிதி நிறுவனத்திலிருந்து கடந்த 2023ம் ஆண்டு மார்ச் மாதம் ரூ.40,000/- கடன் பெற்று அதே தொகையை எதிரியின் Gpay நம்பருக்கு அனுப்பிவைத்தேன். துறையூரில் உள்ள கிராம சக்தி என்ற நிதி நிறுவனத்திலிருந்து ரூ.50,000/- கடனாக பெற்று ரூ.23,380/- தொகையை Gpay நம்பருக்கு அனுப்பிவைத்தேன். பெரம்பலூரில் உள்ள BSS என்ற நிதி நிறுவனத்திலிருந்து ரூ.40,000/- கடனாக பெற்று எதிரியிடம் நேரடியாக கொடுத்தேன். கடன் வாங்கி கொடுத்தபிறகு எதிரி சில தவணைகள் செலுத்தியுள்ளார். அதன்பிறகு அவர் செலுத்தாததால் நிதி நிறுவனத்திலிருந்து என்னுடைய வீட்டிற்கு வந்து தவணை தொகை கட்ட சொன்னார்கள். எதிரியை தொடர்பு கொண்டபோது அவரது செல்போன் சுவிட்ஜ் ஆப் செய்திருந்தது. எதிரி வீட்டிற்கு சென்று விசாரித்தபோது அவர் அங்கு இல்லை. அவருடைய வீடு செட்டிக்குளத்தில் உள்ள சிவன் கோவில் அருகே அமைந்துள்ளது. பின்னர் இது சம்மந்தமாக மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் அ.சா.1 என்பவர் புகார் கொடுத்தார்.

**Equitos நிறுவனத்தில் என்னுடைய உறுப்பினர் புத்தகம் நகல் ்அ.சா.ஆ.14 ஆகவும், கிராம சக்தி நிதி நிறுவனத்தின் கணக்கு பட்டியல் அ.சா.ஆ.15 ஆகவும், BSS நிதி நிறுவனத்தின் கணக்கு பட்டியல் அ.சா.ஆ.16 ஆகவும், முத்தூட் நிதி நிறுவனத்தின் கணக்கு பட்டியல் அ.சா.ஆ.17 ஆகவும், யூனியன் பேங்க் ஆப் செட்டிக்குளம் கிளையின் 24.03.2023 தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியல் அ.சா.ஆ.18 ஆகவும், யூனியன் பேங்க் ஆப் செட்டிக்குளம் கிளையின் 16.09.2023 தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியல் அ.சா.ஆ.19 ஆகவும், யூனியன் பேங்க் ஆப் செட்டிக்குளம் கிளையின் 02.02.2024 தேதியிட்ட வங்கி கணக்கு**

**பட்டியல் அ.சா.ஆ.20 ஆகவும், யூனியன் பேங்க் ஆப் செட்டிக்குளம் கிளையின் 26.02.2024 தேதியிட்ட வங்கி கணக்கு பட்டியல் அ.சா.ஆ.21 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**24.03.2023ம் தேதி எதிரியின் வசந்தியின் Gpay எண்ணிற்கு ரூ.40,000/- அனுப்பியதற்கான பிரிண்ட் அவுட் நகல் அ.சா.ஆ.22 ஆகவும், 16.09.2023ம் தேதி எதிரியின் வசந்தியின் Gpay எண்ணிற்கு ரூ.23,500/- அனுப்பியதற்கான பிரிண்ட் அவுட் நகல் அ.சா.ஆ.23 ஆகவும், 02.02.2024ம் தேதி எதிரியின் வசந்தியின் Gpay எண்ணிற்கு ரூ.18,340/- அனுப்பியதற்கான பிரிண்ட் அவுட் நகல் அ.சா.ஆ.24 ஆகவும், 26.02.2024ம் தேதி எதிரியின் வசந்தியின் Gpay எண்ணிற்கு ரூ.29,000/- அனுப்பியதற்கான பிரிண்ட் அவுட் நகல் அ.சா.ஆ.25 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

நான் 8ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு மேலே சொன்ன லோன் இல்லாமல் வேறு லோன் வாங்கி கொடுத்து எதிரி கட்டியுள்ளார் என்றால் சரிதான். எதிரி வீடு கட்டவேண்டுமென்றும், உடல்நிலை சரியில்லை என்றும் சொன்னதால் லோன் வாங்கிகொடுத்தேன். லோன் வாங்கி கொடுத்ததில் எனக்கு கமிஷன் எதுவும் இல்லை. நான் மொத்தம் 5 லோன் எதிரிக்கு வாங்கிகொடுத்துள்ளேன். அந்த 5 லோனில் 3 லோனுக்கு நானும், எதிரியும் பாதி, பாதி தவணை கட்டவேண்டும். இரண்டு லோனுக்கும் முழுமையாக எதிரி தவணை கட்டவேண்டும். லோன் தொகையானது என்னுடைய வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. Gpay அனுப்புவதை எதிரிதான் எனக்கு சொல்லிக்கொடுத்தார். ஒரு லோனுக்கு 10 தவணை கட்டியுள்ளார். மற்ற லோன்களுக்கு இரண்டு, மூன்று தவணைத்தான் கட்டியுள்ளார்.

எதிரியிடம் ரூ. 45,000/- லோன் வாங்கி கொடுத்தபோது நான் ரூ.25,000/- ரொக்கமாக எதிரியிடம் பெற்றுக்கொண்டேன் என்றால்இல்லை. கட்ட வேண்டிய மீதி தவணை தொகையை எதிரி கொடுத்தால் வாங்கிகொள்ள சம்மதமா என்றால் சம்மதம். நான் வாங்கி கொடுத்த லோனை எதிரி சரியாகத்தான் கட்டிவருகிறார் என்றாலும், போலீஸார் சொல்லிக்கொடுத்தற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. Gpay மூலம் எதிரிக்கு பணம் கொடுத்ததை எதிரியின் வங்கி கணக்கை சரிபார்த்தால்தான் தெரியவரும் என்றால்சரியல்ல. எதிரி என்னை ஏமாற்றவில்லை என்றால் சரியல்ல.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.